*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – VI Issue - 2
May - 2022

# தமிழ் இலக்கியங்களில் மனிதநேய மாண்புகள்
# (Humanitarian Values in Tamil Literature)

**தெய்வேந்திரன், மு.**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கோபி கலை அறிவியல் கல்லூரி,
கோபிசெட்டிபாளையம் – 638453.

**Corresponding author: tamzhldeiva@gmail.com**

## ABSTRACT

In today's mechanized world, man has no time to love his siblings, relatives and even his children. Man’s expectation of love, affection, kindness and compassion is not recognized as a common man’s quality. But, Tamil literature has revealed in many songs that our ancestors were in harmony hoisting human values. This article is aimed at highlighting the fact that the ancient Tamil people not only loved themselves but also loved other lives.

**Keywords: Humanitarian, Mercy, Compassion, Kindness, Tolerance, Forgiving attitude.**

### முன்னுரை

இன்றைய எந்திரமயமான உலகினில் தம் உடன்பிறப்புகளிடமும் உறவுகளிடமும் அன்புசெலுத்தக் கூட நேரமின்றி இயங்கிக் கொண்டிருக்கும் வாழ்வில் பாசம், நேசம், கருணை, இரக்கம் போன்றவற்றை எதிர்பார்ப்பது கேள்விக்குறியாகி வருகின்றது. ஆனால், நம் முன்னோர் மனித மாண்புகளுடன் செயல்பட்டுள்ளதையும், மனித சமுதாயத்தின் நலம் காக்கின்ற செயல் முறைகளில் மனிதநேய மாண்புகளுடன் ஒன்றியிருந்துள்ளதனையும் தமிழ் இலக்கியங்கள் பல பாடல்களில் புலப்படுத்தி நிற்கின்றன. பண்டைய தமிழ் மக்கள் தங்களுக்குள் அன்பு செலுத்திக் கொள்வது மட்டுமின்றி ஏனைய உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் நேயமிக்கவர்களாக வாழ்ந்திருப்பதனை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

### நேயம்

நேயம் என்ற சொல்லுக்கு, ‘அன்பு, நன்மை, உறவு, பக்தி’ என்ற பொருள்களைக்

கழகத் தமிழ் அகராதியும்[1] கௌரா தமிழ் அகராதியும்[2] சுட்டிக் காட்டுகின்றது. தமிழ்மொழி அகராதியானது ‘அன்பு, நன்மை, உறவு’[3] என்ற பொருள்களைச் சுட்டியுள்ளது.

**மாண்பு**

மாண்பு என்பதற்குக் கழகத் தமிழ் அகராதியும்[4] கௌரா தமிழ் அகராதியும்[5], ‘அழகு, பெருமை, மாட்சிமை, நன்மை’ என்ற பொருள்களைச் சுட்டியிருக்கின்றன. தமிழ்மொழி அகராதி, ‘அழகு பெருமை, மாட்சிமை’[6] என்ற பொருள்களைச் சுட்டியுள்ளது.

**சங்க இலக்கியங்களில் மனிதநேய மாண்புகள்**

தமிழர் தம்முடைய முயற்சியால் பொருளீட்டி அதனைப் பிறர்க்கு வழங்குவதைச் சிறப்பாகக் கருதியுள்ளனர். இதனை மெய்ப்பிக்கும் விதமாகக் குறுந்தொகையுள் உகாய்க்குடிக்கிழார் என்னும் புலவர், இரவலர்க்குக் கொடுத்து இன்பங்களை அனுபவித்தும் பொருள் இல்லாத வறியவர்க்கு இல்லையென்று சொல்லாமல் கொடுத்து உதவிட வேண்டும் என்ற உயரிய நெஞ்சம் கொண்ட தலைவன் பொருள் தேட வேண்டுமென்று தன்னுடைய துணிந்த நெஞ்சினை நோக்கிக் கூறிய திறத்தினை,

**“ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்லெனச்**
**செய்வினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு”**

(குறுந்.63:1-2)

என்னும் பாடலடிகளில் தலைவனது மனிதநேய மாண்பினைப் புலப்படுத்தியுள்ளார்.

நற்றிணை தலைவனின் பண்பினைக் குறிப்பிடும்போது பிறர்க்கென வாழும், ‘அருள்நெஞ்சம்’ கொண்டவன் என்று சிறப்பிக்கிறது. அதாவது, பிறர்க்கென வாழ்பவர் அருள் நெஞ்சம் கொண்டவராவார். அத்திறமே சிறந்த மனிதநேய மாண்பாகும் என்பதனை,

**“பிறர்க்கு எனமுயலும் பேர்அருள் நெஞ்சமொடு”**

(நற்.186:8)

என்ற பாடலடி புலப்படுத்துகின்றது.

மற்றொரு பாடலில் அம்மூவனார், நல்ல எருதானது முன்புள்ள வீறு நடையின் சிறப்பு தளர்ந்து போனதனால் அதனைக் கண்ட உழவர் பெருமகனார் புல்லையுடைய தோட்டத்தில் தொழில் செய்யாமல் விட்டுவிட்டு அவ் எருதினைக் காத்த மனிதநேய மாண்பினை,

**“நல்எருது நடைவளம் வைத்தென உழவர்**
**புல்லுடைக் காவில் தொழில் விட்டாங்கு”**

(நற்.315:4-5)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியச்செய்துள்ளார்.

அகநானூற்றில், குறுங்குடி மருதனார் தலைவனது அன்புள்ளத்தை வெளிப்படுத்தும் விதமாகத் தன்னுடைய தேர்ப்பாகனிடத்தில் அழகிய இக் காட்டிடத்தே கார்ப்பருவம் தோன்றிவிட்டமையால் தேனை உண்ணும் வண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாகப் பறக்கும். அதனால், ஓட்டிச் செல்லுகின்ற குதிரைகளின் வேகத்தைக் குறைத்து மென்மையாகப் பூத்த சோலையில் தன் பெண் வண்டுகளுடன் யாழின் நரம்பு ஒலிக்கும் ஒலியினையுடைய தேனை

உண்ணக் கூடிய வண்டினங்கள் துன்புறாத வண்ணம் ஓட்டிச் செல்லுமாறு வலியுறுத்தியுள்ளான். மேலும், தேரில் அருவியின் ஓசையையொத்த மணிகள் மாலைகளாகக் கட்டப்பட்டிருப்பதிலிருந்து எழும் ஒலியால் மனித உயிர்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களுக்கும் துன்பம் நேராத வண்ணம் தேரை மெதுவாகச் செலுத்தச் செய்துள்ளதனை,

**"கார்செய் தன்றே கவின்பெறு கானம்**
**குரங்குஉளைப் பொலிந்த கொய்சுவல் புரவி**
**நரம்புஆர்த் தன்ன வாங்குவள்பு அரிய**
**பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த**
**தாதுஉண் பறவை பேதுறல் அஞ்சி**
**மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்**
**உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்"**

(அகநா.4:7-13)

ஏன வரும் பாடலடிகளில் தலைவனது மனிதநேய மாண்பினை உய்த்துணரச் செய்துள்ளார்.

புறநானூற்றில் தன்னை நாடி வந்து பொருள் வேண்டி நிற்கும் போது வந்தவரது முகக் குறிப்பினை அறிந்து அவரது விருப்பத்தினை நிறைவேற்றி வறுமையை ஒழித்த பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதியின் மனிதநேய மாண்பினை இரும்பிடர்த்தலையார் என்னும் புலவர் பெருமகனார் போற்றியிருப்பதனை,

**"நின்னசை வேட்கையின் இரவலர் வருவரது**
**முன்னம் முகத்தின் உணர்ந்தவர்**
**இன்மை தீர்த்தல் வன்மையானே"**

(புறநா.3:24-26)

என்ற பாடலடிகள் வழி அறியமுடிகின்றது.

இன்று சகிப்புத்தன்மையானது மறைந்துவிட்டது என்றால் அது மிகையாகாது. மற்றவர்கள் செய்யக்கூடிய சிறு தவற்றைக் கூடப் பொறுக்க முடியாமல் கோபத்தில் பொங்கும் நிலையே மேலோங்கிக் காணப்படுகின்றது. ஒருவர் செய்த தீங்கிற்காக அவரைத் தண்டித்தல் என்பது மனிதத் தன்மையாகாது. தனி மனிதன் இழைக்கும் தவறுகள் குற்றங்களாக இன்று பெருகி நிற்கின்றன. அக் குற்றங்களுக்காகத் தண்டனைக்கும் ஆளாகின்றனர். மற்றொரு வகையில் குற்றங்கள் பெருகுவதற்கு மன்னிக்கும் மனப்பான்மை குறைந்தது காரணமாகும். பொறுத்து அருளக் கூடிய பண்பானது குறைந்துவிட்டது எனலாம். தண்டிக்காது விடினும் குற்றங்கள் பல்கிப் பெருகி மனித இயல்புகள் பாழ்பாட்டு விடுகின்றன என்பதையும் மறுக்க இயலாது. ஆயினும் மன்னிக்கும் நிலையில் மனித மனம் செழுமையடைந்து மனிதநேய மாண்பானது பல்கிப் பெருகும். இத்திறத்தினைச் சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்பான், முறைவழுவாமல் நடுவுநிலைமையோடு நின்று ஆராய்ந்து, குற்றம் செய்தவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கியதோடு, திறன்மிக்க அம்மன்னனைப் பணிந்து நின்றால் அவன்முன் குற்றத்தோடு நிற்பவர்களின் தண்டனையைக் குறைத்து முன்பிருந்ததைவிடப் பேரன்புடன் நடந்து மக்களைக் காத்தவன் என்று ஊன்பொதி

பசுங்குடையார் பாடியிருப்பதன் வாயிலாக அறியமுடிகிறது. இதனை,

"வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதிநீ பண்டையில் பெரிதே"

(புறநா.10:1-6)

என்ற பாடலடிகள் வழி அறியலாம்.

சங்ககால மக்கள் தங்களுக்குள் உதவிக் கொள்வது மட்டுமின்றிப் பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் நேயமிக்கவர்களாக வாழ்ந்திருந்ததனை முல்லைப்பாட்டு பதிவு செய்கின்றது. பசலைக்கன்று பாலுண்ணாமையால், உற்ற துயரால் தாய்வருமென்று ஏங்கிய தன்மையைப் பார்த்த ஆயர்மகள் ஏங்கித் தவித்த கன்றினை நோக்கிக் கொடுங்கோல் கோவலர் பின்னின்று உயத்தர இன்னே வருகுவர் உம் தாயர் ஆகையால் நீ வருந்தாதே என்று கூறித் தேற்றிய மனிதநேய மாண்பின் உயர்நிலையினை,

"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோல் கோவலர் பின்னின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்"

(முல்லைபபாட்டு, 12-16)

எனவரும் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

இந்நிலையினைப் போற்றும் வகையில் வள்ளுவப் பெருந்தகையும்

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

(குறள்.71)

என்று மனிதநேய மாண்பினைப் போற்றியுள்ளார்.

மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார், கூடல்மாநகரில் பசியால் வாடுவோர்க்கு உணவளிக்கும் அன்னசாலைகள் பல இருந்தன. என்பதையும் எப்போதும் தேன் மணம் கமழும் பலாச்சுளைகளும், பல வகைப்பட்ட மாம்பழங்களும், பிற கனிகளும், பல்வேறுபட்ட காய்கறிகளும் கொண்டு சமைத்த அமுதம் போன்ற இனிமையான பலவகையான உணவுகளும், கிழங்குகளும் விற்கப்பட்டன என்பதையும் பதிவு செய்துள்ளார். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் உயரிய மனிதநேய மாண்பினை,

"சேறும் நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வேறு உருவின் காயும் பழனும்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடு கவினி
மென்பிணி அவிழ்ந்த குறுமுறி அடகும்
அமிர்து இயன்றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேர்ஊன் சோறும்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்
இன்சோறு தருநர் பல்வயின் நுகர"

(மதுரைக்காஞ்சி.527-535)

என்ற இப்பாடலடிகளில் புகழ்ந்துரைத்துள்ளார்.

## சங்கம் மருவிய இலக்கியங்களில் மனிதநேய மாண்புகள்

திருவள்ளுவர் ஏதுமற்ற வறியவரின் கொடிய கடும்பசியினைப் போக்க வேண்டுமென்று எவரொருவர் எண்ணுகின்ற மாண்பினைப் பெற்றுள்ளாரோ அவ் எண்ணமே அவருக்குப் பன்மடங்கு செல்வத்தைச் சேர்த்து வைக்கும் களமாக மாற்றியமைக்கும் என்பதனை,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

(குறள்:226)

எனும் குறளில் தெளிவுபடுத்தியுள்ளார்.

மற்றொரு குறளில் கருணை உள்ளம் கொண்டிருப்போர் ஒருபோதும் உயிர் அச்சம் கொண்டதில்லை என்கிறார், இதனை,

"மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வார்க் இல்லென்ப
தன்உயிர் அஞ்சும் வினை"

(குறள்:244)

என்ற குறள் வழி அறியலாம்.

சிலப்பதிகாரத்தில், மதுரை செல்லும் கோவலன் கண்ணகியோடு சேர்ந்து அவர்களுக்குத் துணையாக வந்த கவுந்தியடிகளின் கருணை உள்ளம் போற்றத்தக்கது. மேலும், 'மதுரைக்குப் புதிதாக வந்த கண்ணகியை வரவேற்று அடைக்கலமாகப் பெற்ற இடைக்குல மடந்தை, ஆய்ச்சியர் வீட்டில் தங்க வைக்காமல் தனி வீடு அமைத்துக் கொடுத்துத் துணைக்குச் சில ஆய்ச்சியர்களையும் பணிக்கு அமர்த்தியதுடன் தன் மகளையும் அனுப்பி வைத்து உதவியாக இருக்கச் செய்துள்ளார். அத்துடன், மாதரி ஆய்ச்சியர்களிடம் இவளுடைய கணவன் சாவக நோன்பு நோற்றுள்ளான் என்பதைக் கூறிக் காத்திடுமாறு வேண்ட, அவர்களும் புதிய பாத்திரங்களைத் தேவைக்கு அதிகமாகக் கொடுத்தது வெள்ளிய வரியையுடைய வெள்ளரிக்காய், மாதுளையின் இளங்காய், மாம்பழம், வாழைப்பழம், சாலி என்ற அரிசி, பால், தயிர், மோர், நெய் ஆகிய பாலால் விளைந்த பொருட்களையும் கொடுத்தனர். இதனை,

"அரும்பெறல் பாவையை அடைக்கலம் பெற்ற
இரும்பேர் உவகையின் இடைக்குல மடந்தை
…… …… …… ……
…… …… …… …….
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீம்கனி
சாலி அரிசி தம்பால் பயனொடு
கோல்வளை மாதேகொள்க எனக் கொடுப்ப"

(சிலம்பு.6:1-28)

ஏன

வரும் பாடலடிகளால் அறியமுடிகின்றது.

தம்மைப் பழித்துப் பேசியதுடன் எள்ளி நகையாடிய போதும் அருளும் குணம் கொண்ட மனிதநேய மாண்பாளர்களாகக் கோவலனும் கண்ணகியும் இருந்துள்ளனர் என்பதனை,

"நறுமலர்க் கோதையும் நம்பியும் நடுங்கி
நெறியின் நீங்கியோர் நீர்அல கூறினும்
அறியாமை என்று அறியல் வேண்டும்
செய்தவத் தீர்நும் திருமுன் பிழைத்தோர்க்கு
உய்திக் காலம் உரையீ ரோஎன
அறியாமையின் இன்று இழிபிறப்பு உற்றோர்"

(சிலம்பு.10:236-241)

என்ற அடிகள் வழியாகத் தெரிந்து கொள்ளலாம்.

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண் மகவு மணிமேகலை. இவளைக் காப்பியத் தலைவியாகவும் வாடி நின்றோர் அத்துணை பேருக்கும் உதவும் மனிதநேய மாண்புடையவளாகவும் படைத்துள்ளார் சீத்தலைச்சாத்தனார். தீவதிலகை என்ற தெய்வத்தின் உதவியோடு பசியின் கொடுமையை அறிந்துடன் அள்ள அள்ளக்

குறையாத அமுத சுரபியினைப் பெற்று உலகில் பசியாலும் நோயாலும் வாடுவோர்க்கு அமுது படைத்தாள் இதனை,

"தீவ திலகை சேயிழைக்கு உரைக்கும்
குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவிஅது தீர்த்தோர்"

(மணி.11:75-80);

"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறம்விலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகி"

(மணி.11:92-97)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

மேலும் மனிதநேய மாண்பினை,

"நீர்நசை வேட்கையின் நெடுங்கடம் உழலும்
சூல்முதிர் மடமான் வயிறுகிழித்து ஓடக்
கான வேட்டுவன் கடுங்கணை துரப்ப
மான்மறி விழுந்தது கண்டு மனம்மயங்கிப்
பயிர்க்குரல் கேட்டுஅதன் பான்மையன் ஆகி
உயிர்ப்பொடு செங்கண் உகுத்த நீர்கண்டு
ஓட்டி எய்தோன் ஓர்உயிர் துறந்ததும்"

(மணி.23:112-118)

என்ற அடிகளில் வியந்து போற்றியுள்ளார். அதாவது, நீர் உண்ணுதலை விரும்பி வேட்கையினால் கரு முதிர்ந்த இளையமான் ஒன்று நீண்ட காட்டினுள் ஓடித் திரிந்து கொண்டிருந்தது. அங்கு வந்த கான வேட்டுவன் அதனுடைய வயிற்றைக் கிழித்துச் செல்லும் விதமாகக் கடிய அம்பினைச் செலுத்தினான். அப்பொழுது, அப்பெண்மான் வயிற்றிலிருந்து மான்குட்டி வெளியே வந்து விழுந்தது. அதன் சாக்குரல் கேட்டு, அதன் பக்கத்தில் வந்து, நெட்டுயிர்ப்புடன் அதன் சிவந்த கண்களினின்று சிந்துகின்ற கண்ணீரினைக் கண்டு, தாய்மை உள்ளத்தின் நிலையை உணர்ந்து அந்த வேட்டுவன் தன் உயிரினை அவ் இடத்திலேயே நீத்தான். பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதிய தொல் தமிழரின் மனிதநேய மாண்பினை இதன்வழி அறியமுடிகின்றது.

## முடிவுரை

- மனிதன், மனிதனிடத்து மட்டுமல்லாது மற்றைய உயிரினங்களிடத்தும் அன்பும் இரக்கமும் கொண்ட உயரிய பண்புதான் மனிதநேய மாண்பாகப் போற்றப்படுகிறது என்பதனைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.
- மனிதநேய மாண்பானது எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் பொதுவானது என்பதையும் பிற உயிரினங்களையும் தன்னுயிர் போல எண்ணி இரக்கம் காட்டுகின்ற மாண்பு வேற்று நிலத்தவரைக் காட்டிலும் தமிழ் நிலத்தவருக்கு மிகுதியாக இருந்திருக்கின்றது என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.
- இன்றைய வாழ்வில் பணம் படைத்தவர்களும் பதவியில் இருப்பவர்களும் பணத்தைத் தேடித் தேடிச் சென்று சேர்த்துக் குவித்துவிட்டுக் கடைசிக் காலத்தில் தன்னருகில் நல்ல மனம் படைத்த மனிதநேய மாண்பாளர்கள் இன்றித் தவித்து மாயும் வாழ்வு தான் மிகுந்து

காணப்படுகின்றது என்பதையும் இந்நிலையை மாற்றியமைக்க மனிதநேய மாண்பினை வளர்ப்பதுடன் மறவாது காப்பதும் இன்றியமையாதது என்பதையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது,

**சான்றெண்விளக்கம்**

1. கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, ப.625
2. கௌமாரீஸ்வரி.எஸ். (ப.ஆ.), கௌரா தமிழ் அகராதி, ப.475
3. கதிரைவேற்பிள்ளை.நா., தமிழ் மொழி அகராதி, ப.932
4. கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, ப.755
5. கௌமாரீஸ்வரி.எஸ். (ப.ஆ.), கௌரா தமிழ் அகராதி, ப.556
6. கதிரைவேற்பிள்ளை.நா., தமிழ் மொழி அகராதி, ப.1160

**துணைமை நூல்கள்**


1. இராமசுப்பிரமணியன் வத(உ.ஆ.), சிலப்பதிகாரம் மூலமும் உரையும், பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு:2009.
2. கதிரைவேற்பிள்ளை நா, தமிழ் மொழி அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு:2003.
3. கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, கழகவெளியீடு, சென்னை, மறுஅச்சு:2010.
4. கௌமாரீஸ்வரி எஸ் (ப.ஆ.), கௌரா தமிழ் அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு:2010.
5. செல்லப்பன் சு, சிலம்பொலி முனைவர் (உ.ஆ.), மணிமேகலை (மூலமும் தெளிவுரையும்), பாரதி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு:2015.
6. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், திருக்குறள், கழக வெளியீடு, சென்னை, 20ஆம் பதிப்பு:1998.
7. சோமசுந்தரனார் பொவே (உ.ஆ.), குறுந்தொகை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, கழகவெளியீடு, சென்னை, மறுஅச்சு:2008.
8. துரைசாமிபிள்ளை சு, புறநானூறு, கழகவெளியீடு, சென்னை, மறுஅச்சு:2007.
9. பின்னத்தூர் நாராயணசாமி அ (உ.ஆ.), நற்றிணை நானூறு - மூலமும் உரையும், கழகவெளியீடு, சென்னை, மறுஅச்சு:2007.
10. வேங்கடசாமி நாட்டார், ந.மு., வேங்கடாசலம் ரா(உ.ஆ.), அகநானூறு, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு:2007, 2008, 2009.